திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை தாராளமாகக் கடன் வழங்குவதற்கு திட்டம் வைத்திருந்தாலும் கூட, அது விதிக்கிற கடுமையான நிபந்தனைகளினாலே, ஏழை. எளியவர்கள் கடனை உடனடியாகப் பெற இயலவில்லை. எனவே அந்த நிபந்தனைகளைத் தளர்த்தி அவர்களுக்கு உதவுகிற திட்டத்தை அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தொடங்க வாங்கும் கடன் தொகைகளைக் குறிப்பிட்ட காலத்தில் கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்துவதில்லை. அந்த பாக்கியினை நீண்டகால பாக்கியாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள், அதனால்தான் அரசு இதுபோன்ற கடுமையான முறைகளை வைத்திருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக் களை ஏற்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநிலம் முழுமைக்கும் எத்தனை பேர் களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும், படித்த பட்டதாரிகளுக்கு இந்தக் கடன் வழங்குவதற்கு ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு முதல், 1983 ஆம் ஆண்டு வரை மொத்தம் 30,945 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு இருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் சுமார் 35,124 பேர்களுக்கு கடன் உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்த பட்டதாரிகளுக்கு இதுபோன்று ஏதாவது சிறப்புத் திட்டம் அரசினிடம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா என்பதைக் கேட்டார்கள். அதற்கு தற்போது என்னிடம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளார் அணைத் திட்டம்.

757 (* வினா எண் 3508-ஏ)—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

உள்ளார் அணைத் திட்டம் அரசு ஆய்வு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இல்லை.

1985 ஜூலை 19]

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்தை அரசு ஆய்வு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, உள்ளார் நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அரசு இந்த திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் திட்டத்தினால் பலன் அடையக் கூடிய இரண்டு ஆயக்கட்டுதாரர்களிடையே தகராறு ஏற்பட்டது. அந்தத் தகராறு சம்பந்தமாக தற்போது திரு. சுப்பராயன் மற்றும் 5 ஆயக்கட்டுக்காரர்கள், வழக்கை உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்தை அரசு ஆய்வு செய்தபோது, நீதிமன்றத்திற்கு போனவர்கள், உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் சம்பந்தமாகப் போகவில்லை. அது ரெங்குவார் சம்பந்தமாகத்தான் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். அந்த ரெங்குவார் சம்பந்தமாக பான் அவர்கள் கூட நீதிமன்றத்தில் இருந்து வழக்கை வாபஸ் வாங்குவதற்கு இன்றைக்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, இந்த உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் வந்தால், அங்கே சுமார் 30 ஆயிரம் ஏக்கரி லிருந்து 40 ஆயிரம் ஏக்கர் வரைக்கும் பாசனம் பெற்று அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் நன்மை பெறுவார்கள். அதோடு மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வருகிற தண்ணீரை, இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துகிற ஒரு நல்ல திட்டமாக இருக்கிற காரணத்தால், இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை அரசு தீட்டி செயல்படுத்துகின்றபோது, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அந்தத் திட்டத்தால் பலன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் செயல்படுத்தப் படுகின்றது. ஆனால், அவ்வாறு செயல்படுத்துகின்ற நேரத்தில், கிடைக்கக் கூடிய பயனை, சந்தேகத்திற்கு உட்படக்கூடிய அளவிற்கு அந்த ஆயக்கட்டுதாரர்களுக்கு இடையே தகராறு இருக்கின்ற நேரத்தில் தகராறில் யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதைத் தெளி வாகத் தெரிந்து கொண்டுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும். மேலும் மேற்குத் தொடர்ச்சி மலைத் தண்ணீரை அந்தப் பகுதியிலே திருப்பி விடுவதைப் பற்றிச் சொன்னார்கள். இந்த உள்ளார் திட்டத்தைப் பொறுத்த வரையிலும், அதிலே கேரள அரசு போன்ற வேறு மாநிலப் பிரச்சனைகள் இல்லா

விட்டால், பணிகள் சுலபமாக இருக்கும். வேறு மாநிலப் பிரச்சனைகள் வந்தால்,—இன்று நாட்டிலே நடக்கக்கூடிய நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரியும்—அந்த முறையிலே தான் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நெல்லிக்குப்பத்தில் பயணியர் விடுதி.

758.(*வினா எண் 3771)—திரு.துரை அன்பரசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகரத்தில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் அமைச்சர் பெருமக்களும் அரசு உயர் அதிகாரிகளும் அந்தத் தொகுதியைச் சுற்றிப் பார்க்க வருகின்ற காலங்களில் தங்குவதற்கு சரியான இடவசதி இல்லை என்று நாங்கள் பலமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலேயும், சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர் இடத்திலேயும் மனுக்கள் செய்தும், 1980 ஆம் ஆண்டு, தாசில்தார் அவர்கள் நெல்லிக்குப்பம் திருக்கண்டேஸ்வரம் என்ற அந்தப் பகுதியிலே இடத்தை பார்வையிட்டார்கள். பயணியர் விடுதி கட்டுவதற்காக, அப்படிப் பார்வையிட்டு இதுநாள் வரையிலும் கட்ட முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் ஒரு பயணியர் விடுதி கட்டுவது பொருத்தமட்டில் பொதுப்பணித் துறையின் மூலமோ அல்லது நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிலோ எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை என்பதை எனக்கு இங்கே விவரமாகத் தந்து இருக்கிறார்கள். இருந்தாலும் கூட நெல்லிக்குப்பத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பண்ருட்டியில் 2-வது வகுப்பு பயணியர் விடுதி ஒன்று ஏற்கனவே இருக்கிறது என்பதையும் அதிலே 2 அறைகளும் அதற்கு தேவையான வசதிகளும் இருக்கின்றன என்றும் தலைமைப் பொறியாளர், ஊரகப் பணித் துறை அவர்கள் இங்கே விவரமாகத் தந்து இருக்கிறார்கள். அந்த முறையில் பக்கத்தில் ஒரு நல்ல பயணியர் விடுதி இருப்பதால் புதிதாகப் பயணியர் விடுதி கட்டத் தேவையில்லை என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.